Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

24.10.2020 சனிக்கிழமை



## புதினம் தெரியுமோ

நாட்டில கொரோனா சமூகப் பரவல் இன்னும் ஏற்படேல கட்டுப்பாட்டுக்கதான் எல்லாம் இருக்கு எண்டு அரசு சொல்லிக்கொண்டிருக்கு. ஆனா தொற்றுக்குள்ளான ஆக்களைத் தனிமைப்படுத்திறதில கூட ஒண்டும் ஒழுங்கா நடக்கேல போல இருக்கு. ஜனாதிபதி செயலணிதான் இந்தக் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தினம். ஆனா அதெல்லாம் ஒருங்கமைப்புக்குள் இருக்கிற மாதிரித் தெரியேல. கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட ஆக்கள் தனிமைப்படுத்தின பிறகு, ஒண்டில்ல ஒன்பது இடங்களில இருந்து வந்து ஆக்கள் ஒரே கேள்வியக் கேட்டுக் கொண்டு போயினம் என்று 2

# யாழ். வாசிகள் இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவருக்கும், வடமராட்சி, வல்வெட்டியைச் சேரந்த பொறியியலாளர் ஒருவரும் வவுனியா, நெடுங்கேணியில் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அவரை அண்மையில் சென்று சந்தித்து வந்த அவரது தாய் சாவகச்சேரியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். 2

## கொரோனா சாவு 15

கொழும்பு, ஒக்.24

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக உயர்ந்துள்ளது. குளியாப்பிட்டி வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த, 56 வயதான ஆண் 2

## பல்கலை வெட்டுப்புள்ளி திங்கள் வெளியாகும்

கொழும்பு, ஒக்.24

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள் 2

## நாடு முடக்கப்படும் என்பது வதந்தியே!

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

நாடு முழுவதும் முடக்கப்படும் என்று சிலர் போலிப் பரப்புரைகள் மேற்கொள்கின்றனர். அவ்வாறு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தற்போது 2

## 'பட்ஜட்' வந்ததும் அடுத்த 'பல்டி'!

### '20' ஐ ஆதரித்த 8 பேரில் இருவருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகள்

கொழும்பு, ஒக்.24

எதிரணியைச் சேர்ந்த மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையவுள்ளனர் என்றும் அதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன என்றும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. 2

## காலி மீனவர் திடீரென உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.25

காலி மீன்பிடி துறைமுகத்தைச் சேர்ந்த மீனவரொருவர், திடீரெனெ ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக இன்று காலை உயிரிழந்துள்ளார் என்று காலி துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். துறைமுக வளாகத்தில் வைத்து அவருக்கு 2

## ஒரு நாளில் 27 பேருக்கு கிழக்கில் கொரோனா!

### தொற்றாளர் பலர் தலைமறைவு

கொழும்பு, ஒக்.24

கிழக்கு மாகாணத்தில் ஒரே நாளில் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். பேலியகொட மீன் சந்தை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் பலர் மறைந்துள்ளனர். பொதுமக் 2

## நாடாளுமன்ற பேரவைக்கு உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, ஒக்.24

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கையொப்பமிட்ட பின்னர், முதற்கட்ட நடவடிக்கையாக நாடாளுமன்ற பேரவைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

அரசமைப்பு பேரவைக்கு பதிலாக 20 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற பேரவையில் 5 உறுப்பினர்களை உள்வாங்குவதற்கே அரசு முன்னதாக தீர்மானித்திருந்தது. எனினும் அந்த எண்ணிக்கையை 9 ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரின் பிரதிநிதி , எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி ஆகியோர் இந்தக் 2

## சமூகத் தொற்று வந்தால் நிலைமை தலைகீழாகும்

### மாவட்டங்களுக்கிடையில் பயணத்தடை விதிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.24

சமூகத்தொற்று என்ற அபாய கட்டத்தை நெருங்கிவிட்டோம். சமூகப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்தபட்சம் மாவட்டங்களுக்கிடையில் பயணத்தடை விதிக்கும் முடிவையாவது அரசு எடுக்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர், வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்ததாவது

கொரோனா வைரஸ் தாக்கம் சமூகப்பரவல் என்ற கட்டத்துக்கு 2

# யாழ். வாசிகள்...

வவுனியா, நெடுங்கேணியில் வீதித் திருத்தப் பணியில் ஈடுபடுவோர் சிலர் கொரோனாத் தொற்றுடன் சில தினங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டனர். அதையடுத்து அவர்களுடன் தொடர்புடைய பலர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அந்தப் பரிசோதனை முடிவு களின்படி வீதித் திருத்தப் பணிகளுடன் தொடர்புடைய பொறியியலாளர் ஒருவருக்குத் தொற்றுள்ளமை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுடன் இனங்காணப்பட்டவரை அவரது தாய் கடந்த 19ஆம் திகதி சென்று சந்தித்துத் திரும்பியுள்ளார். வீதி திருத்தப் பணியாளர்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டதை அடுத்து, பொறியியலாளரின் தாய் 21ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டார். தாயுடன் தொடர்புபட்ட 7 க்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, வடமராட்சி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண் பொறியியலாளர் கடந்த 13ஆம் திகதி வீடு வந்து சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவருடன் தொடர்புடைய நபர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26)

## பல்கலை வெட்டுப்புள்ளி...

ளது. கொரோனா நிலைமை மற்றும் வெட்டுப்புள்ளி வெளியீடு தொடர்பான வழக்கு ஆகியவற்றின் காரணமாக வெட்டுப்புள்ளி வெளியீடு தாமதமடைந்துள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
2019ஆம் வருட பெறுபேறுகள் கடந்த டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்டன. (எ-இ)

## நாடு முடக்கப்படும்...

50 பொலிஸ் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் மக்கள் வீடுகளிலேயே தங்கியிருக்க வேண்டும். ஊரங்குச் சட்டம நடைமுறைப்படுத்தப்படாத இடங்களைச் சேர்ந்த மக்கள் அநாவசியப் பயணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். என்றார்.(எஇ)

## நாடாளுமன்ற பேரவைக்கு....

குழுவில் இடம்பெறுவர். எனினும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவார்களா என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.
இவ்வாறு நாடாளுமன்ற பேரவை நியமிக்கப்பட்ட பின்னர் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படு வார்கள், தலைவர் உட்பட இதற்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்குவார். அதற்கான அங்கீகாரத்தை வழங்கும் பொறுப்பு நாடாளுமன்ற பேரவையிடம் உள்ளது. எனினும் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நடைமுறையில் இருந்த அரசமைப்புப் பேரவையுடன் ஒப்பிடுகையில் நாடாளுமன்ற பேரவையானது வலுவிழந்ததாகவே காணப்படுகின்றது.
முதலில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு , மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள், அதன்பின்னரே இதர குழுக்கள் செயலுக்குவரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-44)

## சமூகத் தொற்று...

வரவில்லை என்றும், அடையாளம் காணப்படும் தொற்றாளர்களுக்கு மினுவாங்கொட கொத்தணி பரவலுடன் ஏதேனுமொரு அடிப்படையில் தொடர்புபட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கான விஞ்ஞானபூர்வமான தகவல்களை வெளியிடுமாறு கோருகின்றோம்.
சமூகப் பரவல் என்ற அபாயம் இருப்பதால் உரிய உண்மையான தகவல்களை வெளியிட்டு அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சிலவேளை, சமூகத்தொற்று ஏற்படும்பட்சத்தில் மரண எண்ணிக்கை அதிகரிக்கும், மருத்துக் கட்டமைப்பு ஸ்தம்பிதமடையும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் இடமில்லாமல்போகும், அவசர சிகிச்சைப்பிரிவுகள் நிரம்பிவழியும் நிலை ஏற்படும். சமூகத்தொற்றை தடுக்கவேண்டும். உலகில் பலமான சுகாதாரக் கட்டமைப்புகளைக்கொண்ட நாடுகளில்கூட சமூகதொற்று ஏற்பட்டபின்னர், மருத்துவ கட்டமைப்பு முடக்கியது, எனவே, தற்போது என்னதான் கூறினாலும் இங்கும் சமூகத்தொற்று ஏற்பட்டால் நிலைமைமாறும். எனவே தான் சமூகத்தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்திவருகின்றோம்.
கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் குருணாகலை ஆகிய ஐந்து மாவட்டங்களே தற்போதைய சூழ்நிலையில் அபாய வலயமாக இருக்கின்றன. இம்மாவட்டங்களில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு தொற்று ஏதேனுமொரு விதத்தில் பரவக்கூடியநிலை காணப்படுகின்றது. எனவே, பிரதேச ரீதியாக முடக்கங்களைச்செய்ததுபோல குறைந்தபட்சம் இம்மாவட்டங்களுக்கான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.
அவ்வாறு இல்லாவிட்டால் பேலியகொடபோன்ற மேலும் சில கொத்தணி பரவல்கள் உருவாகக்கூடும்.என்றார்.(எ44)

## கொரோனா...

ஒருவரே இன்று உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
குளியாப்பிட்டி, ஊரலிய, கித்தலவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர், கொரோனாத் தொற்றுடன் இந்த மாதம் 14ஆம் திகதி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.
இந்தநிலையில் குறித்த நபர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இருதய நோய், சிறுநீரகப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளைக் கொண்டிருந்த, அந்த நோய்களின் உக்கிரம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று உயிரிழப்புகள் 15ஆக அதிகரித்துள்ளன. அவர்களில் 10 ஆண்களாவர். 5 பேர் பெண்களாவர்.
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 7 ஆயிரத்து 153 பேரில் தற்போது 3 ஆயிரத்து 494 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை 3 ஆயிரத்து 644 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.
இதேவேளை, மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையில் 426 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது. (எ-22)

## ஒரு நாளில் 27 பேருக்கு...

கள் இதுவிடயத்தில் உதவவேண்டும். இன்றேல் கிழக்கில் கொரோனா பரவுவதைத் தடுக்க முடியாது போகலாம்.
இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தி கலாநிதி டாக்டர் அழகையா லதாகரன் எச்சரித்துள்ளார்.
கொரோனாவின் சமகால நிலைமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 6 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 பேரும், கல்முனைப் பிராந்தியத்தில் 09 பேரும், அம்பாறை நகரில் ஒருவருமாக ஒரே நாளில் 27 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.
பேலியகொட மீன்சந்தை சம்பவத்தையடுத்து எமக்குக் கிடைத்த தகவலின்படி சந்தேகத்தில் பேரில் பலரைத் தேடிப்பிடித்து தனிமைப்படுத்தி பி.சி. ஆர். பரிசோதனை செய்தபோது இந்த 27 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.
கல்முனைப் பிராந்தியத்தில் கல்முனைக்குடியில் 3 பேரும், நிந்தவூரில் ஒரு பெண்மணியும், பொத்துவிலில் 5 பேருமாக 9 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் மட்டக்களப்பில் வாழைச்சேனை கோறளைப்பற்றில் 11 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.
அம்பாறை நகரில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். இவர் திவுலப்பிட்டியவில் நடந்த திருமண வீடொன்றுக்குச் சென்று திரும்பி வந்தவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
நிந்தவூரில் இனங்காணப்பட்ட பெண்மணியின் தொற்று எங்கிருந்து வந்தது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.
இன்னும் பலர் சமூகத்துக்குள் மறைந்து வாழ்ந்து வருகின்றனர். எனவே, பொதுமக்கள் இந்த விடயத்தில் தகவல் தெரிந்தால் அருகிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
அலட்சியமாக இருந்தால் கிழக்கில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும். சுகாதாரத் துறை மட்டும் இந்த விடயத்தில் கவனம் எடுத்தால் போதும் என்று எண்ண வேண்டாம். எனவே தயவுசெய்து சகலரும் ஒத்துழைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்என்றார்.
(எ-22)

## புதினம் தெரியுமோ?

**சனம் விசனப்படுது.**
**ஜனாதிபதி செயலக கொரோனா ஒழிப்புப் பிரிவு ஆக்கள், பொலிஸ், இராணுவம், சுகாதாரப் பரிசோதகர் எண்டு ஒராள்மாறி ஒராள் வந்து ஒரே கேள்வியக் கேட்டுக் கொண்டு போயினமாம். தனிமைப்படுத்தினதில் ஏற்கனவே பயந்து போயிருக்கிற ஆக்கள ஆளாளுக்கு வந்து கேள்வி கேட்டு வெருட்டிப்போட்டுப் போயினம் எண்டு செல்லுது சனம்.**
**கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒரு கட்டுப்பாடும் இல்லாம, ஒருங்கமைப்பும் இல்லாம இருக்கிறதுதான் இதுக்குக் காரணம் கண்டியளே. இந்த லட்சணத்திலதான் நாட்டில இன்னமும் கொரோனா சமூகத் தொற்று ஏற்படேல எண்டு சொல்லிக்கொண்டிருக்கினம் பாருங்கோ.**
**– பட்சி**

## 'பட்ஜட்' வந்த...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நவம்பர் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.
இவ்வாறு முன்வைக்கப்படும் வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே எதிரணி உறுப்பினர்கள், மொட்டு அரசுடன் சங்கமிக்கவுள்ளனர். அதில் சிறுபான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.
அதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைபுக்கு ஆதரவாக வாக்களித்த 8 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவருக்கு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.
முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குமே இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதன.
அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவியை வகிக்கும் சமல் ராஜபக்ச ராஜாங்க அமைச்சு பதவியொன்றையும் வகிக்கின்றார். அந்த அமைச்சு கைமாறும் அதேநேரம், இராஜாங்க அமைச்சராக இருக்கும் ஒருவர் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சராக நியமிக்கப்படக்கூடும் என தெரியவருகின்றது. (எ-44)

## காலி மீனவர்...

நெஞ்சுவலி ஏற்பட்டது என்றும், அவர் உடனடியாக கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கும்வரை உடல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பேலியகொடை மீன் விற்பனை:
# கோரளைப்பற்றில் 11 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு, ஒக்.24

பேலியகொடை மீன் வியாபாரத்துக்குச் சென்ற கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவி லுள்ள 11 பேருக்கு கொரோனாத் தொற்று இன்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோரை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பேலியகொட மீன் சந்தைக்கு சென்றவர்கள் மூலம் திருகோணமலை, பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு போன்ற பகுதி களில் உள்ளவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் தேவையில்லாமல் வீதிகளில் செல்வதைத் தவிர்ப்பதுடன், இவர்களு டன் சம்மந்தப்பட்டவர்கள் இருப்பின் பொதுமக்கள் பொலிஸார் மற்றும் சுகா தார பிரிவினருக்கு அறிவித்து இந்தத் தொற்று மேலும் பரவாமல் தடுப்ப தற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கு மாறு பொதுமக்களிடம் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-இ)

## ஊரடங்குப் பகுதிகளில் ரயில்கள் நிறுத்தப்படாது

கொழும்பு, ஒக்.24

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ள பகுதிகளில், ரயில் கள் நிறுத்தப்படமாட்டாது என்று ரயில் கட்டுப்பாட்டு மையம் அறிவித்துள்ளது..

அதற்கமைவாக யட்டகொட முதல் கொழும்பு கோட்டை வரையான பகுதிகளிலும், புத்த ளம் முதல் கொழும்பு வரையான பகுதிகளிலும், கடலோர ரயில்ப் பாதைகள் மற்றும் பென்தொட முதல் கொழும்பு வரையான பகுதிகளில் பயணிக்கும் ரயில்கள் நிறுத்தப்படமாட்டாது.

அத்துடன் மருதானை மற்றும் தெமட்கொட ரயில் நிலை யங்களில் ரயில் நிறுத்தப்பட மாட்டாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இருப்பினும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்கு விசேட ரயில் சேவைகள் இன்னும் செயற்பாட்டில் உள் ளமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்காகவும், பரீட்சை அதிகாரி களுக்காகவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ரயில் மற்றும் விசேட ரயில்களைத் தவிர்த்து ஏனைய ரயில்கள் எந்தவொரு நிலை யங்களிலும் நிறுத்தப்பட மாட் டாது எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (க-இ)

## நாடு முழுவதும் 40 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.24

நாடளாவிய ரீதியில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என கொரோனாத் தடுப்பு தேசிய செயலணி வெளியிட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் 33 ஆயிரம் பேர் பொது சுகாதார பரிசோதகர்களி னால் கண்காணிக்கப்பட்டுவரு கின்றனர் எனவும் அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து நாடா ளாவிய ரீதியில் அமைக்கப்பட் டுள்ள 73 தனிமைப்படுத்தல் நிலையங்களில் சுமார் 7 ஆயிரத்து 128 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்குட்படுத்தப்பட் டுள்ளனர். (வ-இ)

## ஆட்பதிவு திணைக்கள சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.24

ஆட்பதிவுத் திணைக்க ளத்தின் தலைமையகம் மற்றும் அனைத்து பிராந்திய அலுவலகங்க ளும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித் துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், இந்தத் திணைக்களங்களை மறு அறிவித்தல் வரை மூடு வதற்கு தீர்மா னிக்கப் பட்டுள்ளது. (ற-இ)

## கொரோனா விழிப்புணர்வு தமிழ் மொழியிலும் தேவை

கொழும்பு, ஒக்.24

கொவிட் 19 வைரஸ் பரவல் தொடர்பிலான அறிவிப்புகளும், விழிப்புணர்வுகளும் பெரும்பா லும் சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் மாத்திரமே உள்ளன.

தமிழ் மொழி ரீதியான அறிவிப்புகள் மிகவும் குறைவாக உள்ளன. இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி னர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட் வைரஸுடனேயே நாம் அனைவரும் வாழவேண்டிய சூழல் உள்ளது. இது எமது நாட்டில் மாத்திரம் ஏற்பட்டுள்ள தொற்றுநோய் அல்ல. பூகோள ரீதியான தொற்றுநோயாகும்.

சரியான தகவல்கள் இந்த வைரஸ் தொடர்பில் மருத்துவ நிபுணர்களிடமும் இல்லை. வரலாற் றில் எந்தவொரு சுகாதார அமைச்சருக்கும் இல்லாத சவால் தற்போதைய சுகாதார அமைச்ச ருக்கு ஏற்பட்டுள்ளது. கொவிட் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குரல்களுக்கும் செவிகொடுக்க வேண்டும். தனிமைப்படுத்தல் நிலையங்கள் காணப்படும் மோசமான நிலைமை காரணமாக அதற்குச் செல்ல மக்கள் அஞ்சுகின் றனர்.

கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் இரண்டாம் நபர்கள் தொடர்பில் சமூகத் தில் பீதியொன்று ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இவர்களைக் குற்றவாளிகள் போன்று பார்க்கின்ற னர் -என்றார். (க-இ)





## கொரோனாவிலிருந்து விடுபட விசேட பூஜை ஆராதனைகள்

யாழ்ப்பாணம், ஒக்.24

நாடு கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி விசேட பூஜை ஆராதனை வழிபாடுகள், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மரியன்னை தேவாலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தின் பங்கு பற்றுதலோடு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை ஜெபரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்த லில் இந்த விசேட பூஜை ஆராதனை இடம்பெற் றது. யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட் டங்கள் அடங்கிய வடக்கு, கிழக்கு ஆயர் மன்றத் தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விசேட பூஜை ஆராதனைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இதன்போது நாட்டில் கொரோனாத் தொற்று நீங்குவதற்கு பிரார்த்தித்ததோடு, தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் வேண்டியும் ஆயர் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது.

இந்த விசேட பூஜையில் யாழ். மறை மாவட்டத் தைச் சேர்ந்த குருமார்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-இ)

# சேவைகளை மட்டுப்படுத்த தொழில் திணைக்களம் முடிவு

கொழும்பு, ஒக்.24

தொழில் திணைக்களத்தின் சேவைகளை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் ஆணையா ளர் நாயகம் பி.கே பிரபாத் சந்திரகீர்த்தி வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 26 ஆம் திகதி முதல், ஊழியர் சேம இலாப நிதியத்தைப் பெறும் பயனாளர்களின் விண்ணப் பங்கள், அருகிலுள்ள தொழில் திணைக்களத்தின் அலுவலகங்கள் ஊடாக மாத்திரமே பெற்றுக் கொடுக் கப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது. அத்துடன், சேவை யைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பயனாளர்கள், முன்கூட்டியே தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளனர். இதற்க மைய, 0112 36 89 04 அல்லது 0112 36 89 11 என்ற இலக்கங் கள் ஊடாக தொடர்புகொண்டு, தமக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும் என தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# பி.சி.ஆர்.எண்ணிக்கையை அதிகரிக்க கோரும் ஐ.தே.க

கொழும்பு, ஒக்.24

பி.சி.ஆர் பரிசோதனையின் எண்ணிக்கையினை மேலும் அதிகரிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கம்பஹா மாவட்டத்தில் சமீபத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றின் தீவிரத்தை அரசாங்கம் புரிந்துகொள்ளவில்லை. கொரோனா தொற்றின் தற்போதைய அலை 13 மாவட்டங்களுக்கு பரவக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் எனவே இந்த தொற்றின் தீவிரத் தன்மையினை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். அதன்படி, நாள் ஒன்றுக்கு செய்யும் பி.சி.ஆர். பரிசோதனைகள் எண்ணிக்கையினை 5000 வரை அதிகரிக்க வேண்டும் என்றும் மருத்துவமனைகளில் கிடைக்கும் வென்டிலேட்டர்கள் மற்றும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தியுள்ளது. (வஇ)

## ஊரடங்கு மீறல்: 71 பேர் கைது

கொழும்பு, ஒக.24

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டவிதி முறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் 71 பேர் கடந்த 24 மணிநேரத்தில்கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் இந்தக் காலப்பகுதியில் 17 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள் ளன. இதற்கமைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டவிதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 759 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

## விபத்தில் மாணவன் சாவு

திருகோணமலை, ஒக்.24

உப்பாறு இராணுவ முகாம் அருகில் இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா வான் எல பகுதியைச் சேர்ந்த சுக்கூர் றயான் (வயது 16) என்ற மாணவன் உயிரிழந்துள்ளார். மாணவன், சக நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து இராணுவ முகாமுக்கு முன்னால் போடப்பட்டிருந்த கம்பியில் சிக்குண்டு கழுத்து வெட்டப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. சடலம் தற்போது கிண்ணியா தள வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

## மதூஷ்ன் மரணம்: ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஒக.24

மாகந்துர மதூஷின் மரணம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தில் அவர் அண்மையில் உயிரிழந்தார். இந்நிலையில் சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினால் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையையும் முன்னெடுக்க எதிர் பார்க்கப்பட்டுள்ளது என குழுவின் செயலாளர் சுதேஷ் நந்திமால் தெரிவித்துள்ளார். (வ-இ)

## இராணுவ கெப்டனுக்கு கொரோனா



கொழும்பு, ஒக்.24

சபுகஸ்கந்தவிலுள்ள பட்டலந்த இராணுவ முகாமிலுள்ள இராணுவ கெப்டனுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இராணுவ முகாமுக்குத் தேவையான மீன்களை கொள்வனவு செய்வதற்காக, பேலியகொட மீன் சந்தைக்கு இந்த இராணுவ கெப்டன் சென்று வந்துள்ள நிலையிலேயே, அவருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப் பட்டுள்ளது. அவர், தற்போது, ஐ.டி.எச் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ற-இ)

## துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் கைது

அம்பாறை,ஒக்.24

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோத உள்ளூர் துப்பாக்கிகளுடன், ஐவர் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 5 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவில் பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரி ஜெயவீரா தலைமையிலான பொலிஸ் குழுவினர், விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில் காஞ்சாரம் குடா பிரதேசத்தில் உள்ள வீடுகளைச் சுற்றிவளைத்து சோதனையிட்டனர். இதன்போது மறைத்து வைக்கப்பட்ட உள்ளூர் தயாரிப்பான 5 சட்ட விரோதத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## களுபோவிலவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்குக் கொரோனா

கொழும்பு, ஒக் 24

களுபோவில போதனா வைத்தியசாலையில் வேறொரு நோய்க்குச் சிகிச்சை பெற்றுவந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வேறு ஒரு நோய்க்கான அறிகுறிகளை கூறிய நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையிலேயே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து களுபோவில வைத்தியசாலையின் ஏழு நோயாளர் விடுதிகளில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களை வீடுகளுக்கு அனுப்பியதாக வைத்தியசாலை பணிப்பாளர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறு அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர் தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இந்த நோயாளர் விடுதியில் பணியாற்றிய 12 ஊழியர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். (ற-இ)

## உலக-மத்திய வங்கி பிரதானிகள் சந்திப்பு

கொழும்பு, ஒக்.24

மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை நாடுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹாடாட் சேர்வோஸ், இலங்கைக்கான உலக வங்கியின் முகாமையாளர் திருமதி. சியோ கண்டா ஆகியோர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்யே பேராசிரியர் டபிள்யு.டி லக்ஸ்மன் ஆகியோருக்கு இடையில் மரியாதை நிமித்தமான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. சந்திப்பின் போது, பொருளாதா உறுதிப்பாடு, இலங்கையின் பல்வேறு துறைகளுக்கான உலக வங்கியின் நிகழ் கால மற்றும் எதிர்கால ஆதரவு எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (வ-இ)

## பரீட்சையில் ஆள்மாறாட்டம்; பல்கலை மாணவன் கைது

புத்தளம், ஒக்.24

உயர்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து தோற்றிய மாணவர் ஒருவர் கற்பிட்டியில் நேற்றுக் கைது செய்யப் பட்டுள்ளார். கைதுதானவர் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வெளிவாரியாக பரீட்சைக்கு தோற்ற வந்துள்ளார். அதன்போது பரீட்சை கண்காணிப்பு குழுவினருக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து, அவரிடம் மேற்கொண்ட விசார ணையில் அவர் ஆள்மாறாட்டம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது. மேலும் கைது செய்யப்பட்டவர் களனி பல்கலைக்கழக மாணவன் எனவும், இவர் உயர்தரப் பரீட்சை ஆரம்பித்த நாள் முதல் தனது சக நண்பனுக்காக பரீட்சை எழுதி வந்துள்ளார் எனவும் முதற்கட்ட விசாரணை யில் தெரிய வந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)

## ரயில் மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, ஒக்.24

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் கொண்டு சென்ற ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து இன்று அதிகாலை 4.50 மணியளவில் இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர் சந்திவெளி வைத்தியசாலை வீதி கடற்கரை பகுதியைச் சேர்ந்த தங்கவேல் (வயது 53) எனத் தெரியவருகிறது. உயிரிழந்தவரின் சடலம் ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

## கடற்பரப்புக்களில் கொந்தளிப்பு நீடிக்கும்

நீர்கொழும்பில் இருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் சிறித ளவில் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது என்று வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக ளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 கிலோ மீற்றர் வரை காணப் படும். மாத்தறையில் இருந்து ஹம் பாந்தோட்டை ஊடாக பொத்து வில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப் போது மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்தில் இருந்து மன்னார் வரை யான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித் தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மாத்தறையில் இருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பு கள் அவ்வப்போது கொந்தளிப்பா கக் காணப்படும்.நாட்டைச் சூழ வுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான கொந்தளிப்பாகக் காணப் படும் என்றும் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (க-இ)

# நாட்டை முடக்குவதா? கொரோனாவுடன் வாழ்வதா?

### அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்கிறார் அநுர

கொழும்பு,ஒக்.24

கொவிட் 19 வைரஸ் பரவலின் முதல் அலை நாட்டில் ஏற்பட்ட வேளையில், அரசு துரிதமாகச் செயற்பட்டதைப் போல், இரண் டாம் அலையின் போது செயற்ப டத் தவறிவிட்டது. இப்போது நாட்டைமுழுமையாக முடக்கு வதா அல்லது கொரோனாவுடன் சமூகச் செயற்பாடுகளை முன்னெ டுப்பதா என்பது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) யின் தலைவர் அனுரகுமார திஸ நாயக்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணையைக் கொண்டு வந்த அவர், விவா தத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது,

நாட்டில் கொரோனா வைரஸ் முதலாம் அலை உருவாகிய போது, அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள்எதனையும் இரண்டாம் அலையின் போது முன்னெடுக்கவில்லை. அது தான் கொரோனா இரண்டாம் அலை மோசமானதாக அமைந்துள்ளது. இந்த இரண்டாம் அலை எவ்வாறு இலங்கைக்குள் மீண்டும் உருவா னது, எவ்வாறு கொரோனா வைரஸ் பரவியது என்பது இன்னமும் கண்டறிய முடியாது உள்ளது என இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

இப்போது கொரோனா வைரஸ் சமூக பரவலாக மாறியுள்ளது, நாட்டில் சில பிரதேசங்களை முடக்கியுள்ளனர். ஆறு மாவட் டங்களைத் தவிர்ந்து ஏனைய சகல மாவட்டங்களிலும் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர். மருத்துவர்களுக்கும், தாதியர் களுக்கும், பொலிஸ்

அதிகாரிகளுக்கும் கூட வைரஸ் தொற்று அடையாளம் காணப் பட்டுள்ளது. மீன் சந்தையிலும், துறைமுகத்திலும் என சகல இடங்களிலும் வைரஸ் பரவல் சமூகப் பரவலாக மாறிவிட்டது. இப்போது என்ன செய்ய வேண் டும்? எவ்வாறு இதனைக் கையாள் வது என்பது குறித்து

சுகாதார அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும். முத லில் நாட்டின் தற்போதைய நிலைமை என்ன என்ற உண்மை களை சுகாதார அமைச்சர் சபைக்கு தெரிவிக்க வேண்டும். ஒன்று நாட்டை முழுமையாக முடக்குவது, அல்லது நாட்டை முடக்காது கொவிட் பரவியுள் ளதை ஏற்றுக்கொண்டு முன்னகர்வது. இந்த இரண்டில் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். இதில் தர்க்கம் ஏற்படும். நாட்டை மீண்டும் முடக்கி சமாளிக்க முடியுமா என்ற கேள்வி எழும், அதேபோல் மக்களால் சாதாரன வாழ்கையை அச்சமின்றி முன்னெ டுக்க முடியுமா என்ற கேள்வியும் எழும். எனவே அரசு இதனை எவ்வாறு கையாளப்போகின்றது என்று அறிவிக்க வேண்டும் என் றார். (க-இ)

ஜனாதிபதி ஆணைக்குழு

# அறிக்கைகளை அறிக்கையிட ஊடகவியலாளருக்கு இடையூறு

கொழும்பு,ஒக்.24

உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நடவடிக்கைகளை அறிக்கை யிடச் சென்ற ஊடகவியலா ளர்கள் பல்வேறு இடையூறுக ளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. ஆணைக் குழுவின் இரகசிய சாட்சிப் பதிவுகளின் போது, சாட்சி விசாரணை அறையிலிருந்து ஊடகவியலாளர்கள் வெளி யேற்றப்படும் நிலையில், ஆணைக் குழுவுக்கு வெளியே இரகசிய சாட்சிப் பதிவுகள் முடிவுறும் வரை காத்திருக் கும் போது இந்த இடையூறு களை ஊடகவியலாளர்கள் சந்தித்து வருகின்றனர்.

கொவிட் 19 தொற்று பரவ லைக் காரணம் காட்டி, ஆணைக் குழுவில் அமைந் துள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஆணைக் குழுவை அன்மித்த பகுதிக ளில் போடப்பட்டிருந்த இருக்கைகள் அனைத்தையும், அதிகாரிகள் அகற்றியுள்ள னர்.

இந்த நிலையில் நாளாந்தம் ஊடகவியலாளர்கள் பல மணி நேரம் வெளியே ஆங்காங்கே நின்றவாறு, தமது அறிக்கையிடல் தயார் படுத்தல்களை முன்னெடுத்து வந்தனர்.

அவ்வாறு ஆணைக் குழுவை அண்மித்த பகுதியில் இருந்த வாறு ஊடகவியலாளர்கள் தமது அறிக்கையிடலை நேற்றுத் தயார் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப பிரதான நிறைவேற்று அதி காரி சுனில் திஸாநாயக்க, தொலைக்காட்சி ஊடகவிய லாளர் ஒருவரை திட்டியுள்ளார். அத்துடன் அவ்வாளகத்துக்கு வெளியே

செல்லுமாறும் அவர் கடும் தொனியில் பணித்துள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்த சுமார் 15 ஊடகவியலாளர் கள் இது தொடர்பில் மண்ட பத்தின் நிறைவேற்று அதிகா ரியை சந்தித்து விளக்கம் கோரினர்.

இதன்போது தான் பயன்ப டுத்திய வசனங்கள் மற்றும் நடந்துகொண்ட முறைமைக்கு அவர் ஊடகவி யலாளர்களிடம் மன்னிப்பு கோரிய போதும், ஊடகவிய லாளர்கள், ஏற்கனவே அறிக் கையிடல்களை முன்வைத்த போது இருந்த இருக்கை வசதிகளை மீள அளிப்பது தொடர்பில் தன்னால் எது வும் செய்ய முடியாது எனத் தெரிவித்தார். அத்துடன் அது தொடர்பில் ஆணைக் குழுவின் செயலரை சந்தித்து ஒழுங்குகளைச் செய்து கொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதனையடுத்து ஊடகவிய லாளர்கள் ஜனாதிபதி விசா ரணை ஆணைக் குழுவின் செயலர் புவனேக ஹேரத் தைச் சந்திக்கச் சென்றனர். இதன்போது ஒரு ஊடகவிய லாளரை மட்டும் அலுவலகத் துக்குள் அனுமதித்த அவர், ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடுவதில் பல னில்லை என அவரிடம் தெரிவித்துள்ளார். இதனால் இதுவரை ஆணைக் குழு நடவடிக்கைகளை அறிக்கை யிட்ட ஊடகவியலாளர்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்தித்த வண்ணம் ஆணைக் குழு நடவடிக்கைகளை அறிக்கையிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை மணி நேரத்துக்குப் பின்னர் பிளாஸ் டிக் இருக்கைகள் சிலவற்றை , பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப நிர்வாகம் எடுத்து வந்து, ஆணைக்குழுவின் சாட்சி விசாரணை அறைக்கு செல்லும் பாதையில் வரிசை யாக வைத்துள்ளனர்.(க-இ)

ஊரடங்கால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவை அதிகரிக்குக

### சரத் பொன்சேகா கோரிக்கை

கொழும்பு,ஒக்.24

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்க ளுக்கு வழங்கும் நிவாரணத் தொகையை, 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனா சுகாதார நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கொரோனா வைரஸ் இரண்டாவது அலையை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில், அதனை அரசு சாதாரணமாக மதிப்பிடக்கூடாது.

நாம் அதனை வைத்து அரசியல் செய்யவோ, அர சுக்கு சேறு பூசவோ முற்படவில்லை. மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலேயே நாம் கருத்தாகச் செயற்படுகின்றோம்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் எந்தவிதத்திலும் போதாது. தற்போதுள்ள வாழ்க் கைச் செலவுக்கமைய அதனை 10 ஆயிரம் ரூபா வாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.

அரசு தொற்றுத் தொடர்பில் மக்களுக்கு எதை யும் மறைக்கக் கூடாது. உண்மையான தரவுக ளைத் தெரிவிக்க வேண்டும் மக்களுக்குச் சரி யான தகவல்களை வழங்கினால் மட்டுமே, மக்கள் தமது பங்களிப்பை வழங்குவதற்கு உதவி யாக அமையும் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.என்றார். (க-இ)

# ஆபத்தான பாதையில் உலக நாடுகள்

### எச்சரிக்கிறது உலக சுகாதார அமைப்பு



ஜெனிவா, ஒக்.24

கொரோனாவை கையாள்வதில் உலக நாடுகள் ஆபத்தான பாதையில் செல்கின்றன என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானொம் ஜெனிவாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது, அடுத்து வரவிருக்கும் சிலமாதங்கள் கடினமானவையாக இருக்கப்போகிறது. தேவையற்ற மரணங்களை தவிர்க்கவும், அத்யாவசிய மருத்துவ சேவைகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், சரியான நடைமுறையை கையாள்வது அவசியம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



## இறுதிக்கட்ட நேரடி விவாதம் ட்ரம்ப் பைடன் கடும் வாதம்

வொஷிங்டன், ஒக்.24

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான இறுதிக்கட்ட விவாதத்தில் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஜோ பைடன் இருவருக்கும் இடையில் கொரோனாத் தொற்று மற்றும் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கு முடக்க நிலைகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் பைடன் வலியுறுத்திய போது, அமெரிக்காவை மீண்டும் திறப்பதற்கு நேரம் வந்துவிட்டது என டிரம்ப் வலியுறுத்தினார். மகனின் வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் பைடன் தனிப்பட்ட முறையில் நன்மைகள் பெறுகிறார் என்று டிரம்ப் குற்றம்சாட்டினார். மறுபுறம் டிரம்பின் வெளிப்படையற்ற வரி விவகாரங்கள் தொடர்பில் பைடன் பதிலுக்கு குற்றம்சாட்டினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் கருத்துக் கணிப்புகளின்படி முன்னிலையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## கடற்படை விமானம் விபத்து இரு விமானிகள் உயிரிழப்பு

நியூயோர்க், ஒக்.24

அமெரிக்காவில் கடற்படையை சேர்ந்த விமானமொன்று விபத்துக் குள்ளானதில் இரு விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

அலபாமா என்ற இடத்தில் யு.இஸ் நேவி ரி6பி என்ற விமானமே விபத்துக்குள்ளானது. விபத்தில் 2 விமானிகள் உயிரிழந்துள்ளதுடன், பொது மக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (வ-இ)

## பிரேசிலில் கொரோனா 53 லட்சத்தை கடந்தது

பிரேசிலியா, ஒக்.24

பிரேசிலில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 53 லட்சத்தை கடந்துள்ளது. இதுதொடர்பில் பிரேசில் சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 24 மணி நேரத்தில் பிரேசிலில் 31,985 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 503 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றைய கொரோனாத் தொற்றின் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 53 லட்சத்தை கடந்துள்ளது. மேலும் 1,55,962 பேர் கொரோனாவுக்கு பிரேசிலில் இதுவரை உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்: 50 மில்லியன் பேர் வாக்களிப்பு

நியூயோர்க், ஒக்.24

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

குறித்த தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடவுள்ளதோடு அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் களமிறங்கியுள்ளார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல மாநிலங்கள் தபால் மூல வாக்கெடுப்புக்களை நடாத்தி வருகின்றன. டெக்ஸாஸில் இதுவரை வாக்குப் பதிவு 76% இடம்பெற்றுள்ளது. புளோரிடாவில் இதுவரை 4 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகி உள்ளன. இந் நிலையில் நவம்பர் 3 ஆம் திகதிக்குள் 150 மில்லியன் பேர் வாக்களிக்க வாய்ப்புள்ளது எனக் கூறப்படுகிறது. (வ-இ)

## பாம்புகளை உண்ணும் மக்கள் கொரோனா முடக்கத்தால் அவலம்

நைபியிடாவ், ஒக்.24

பசிக்கொடுமையால் எலிகள், பூச்சிகள், பாம்புகள் ஆகியவற்றை உட்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் மியான்மார் மக்கள்.

மியன்மாரில் 40,000க்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந் நிலையில் நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த மியன்மாரில் 2ஆவது முறை முடக்கம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் வேலையின்மை, வருமானமின்மை அதிகரிப்பால் மியன்மார் மக்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பசியைப் பொறுக்க முடியாமல் எலிகளையும் பாம்புகளையும் சாப்பிடத் தொடங்கியுள்ளனர்.

மியன்மாரின் கிராமப்புறங்களில் எலிகள், பூச்சிகள், பாம்புகளை உண்ணும் வழக்கம் இருந்தாலும் வறுமையால் நகரங்களில் வாழும் மக்களும் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (வ-இ)

